உ

கடவுள் துணை.

—*—

கள்ளுகடை சிந்து என்னும்

குடியர்கள் சிந்து.

புகையிலைச் சிந்து.

—*—



இவை-சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரவர்களாலும்,

செ-ஏகாம்பரமுதலியாரவர்களாலும்,

இயற்றப்பட்டு.

சென்னை:

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

சென்னை ஆச்சாரப்பன் தெரு, நெ-84.

உ

கடவுள் துணை.

கள்ளுக்கடைச் சிந்து.

—(*)—

விருத்தம்

நம்பினூன் யிருந்தகள்ளே நாடியே அறிந்தகள்ளே
தம்பியுந்தகப்பன்பாட்டன் தலம்பரைகண்டகள்ளே
வம்புநீசெய்தாய்கள்ளேவருவையோ சொல்வாய்கள்ளே
சொம்புபோல்குடுவைகள்ளே சோருபோல்கொதிக்குங்கள்ளே
தங்கம்போலெகருங்கள்ளே தயிரியங்கொடுக்குங்கள்ளே
எங்களைவளர்க்குங்கள்ளே எங்கேபோயொளித்தாய்கள்ளே
சிங்கம்போலெகுருங்கள்ளே ஜெயிலுக்குவனுப்புங்கள்ளே
பொங்கியேவழியுங்கள்ளே புரப்பட்டுவருவாய்கள்ளே.

ஆனந்தக்களிப்பு

ஜாடியேஉனக்கொருகும்பிடு-அந்தசாராயங்குடித்தாக்கால்பேதியெடுக்குது, புட்டியேயுனக்கொருகும்பிடு-அந்தபீரைக்குடித்தாக்கால்சோறைக்கெடுக்குது, கள்ளேயுனக்கொருகும்பிடு - அந்தகஞ்சாவடித்தாக்கால் நெஞ்சைவுலத்துது, மதமேஉனக்கொருகும்பிடு-அந்தமதத்தையிழுத்தாக்கால் பலத்தைக்குரைக்குது, எப்போவருவாயோகள்ளே-உனக்குஇதுஞாயமல்லநீ யெழுந்துவாகள்ளே

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வந்துதேகள்ளு-ஈஸ்வரன் போலே
வந்துதேகள்ளு

அநுபல்லவி.

வந்துதேபார்கள்ளு வாகனங்கருவாடு
நொந்துயிருந்தபேரை நெட்டித்தள்ளிகொண்டு

சரணங்கள்.

ஆதிவிலேகளெல்லாம் அடிமாண்டுபோச்சுது
அஞ்சணுஆணு படியொன்றுஆச்சுது

சோதியதன்சுருக்கும் சூரியனுக்கும்ஏது
சுள்ளைகடித்துக்கொண்டு உள்ளுக்குகள்விட்டால் (வந்)

எழும்புதேபோதை-தலைக்குமேல்தூக்கி
கடிக்குதேயல்லே

ஆராணாலும் ஆட்டுமயிராபோச்சி
அதுகுடிக்கும்போதே காட்டுப்புலியும்சீச்சீ
பாரில்பட்டையும்பத்தாய் குழந்தைகுடிக்கும்பாச்சி
பாட்டாக்கள்ளுருமூச்சி பாணந்தடுத்துப்போச்சி (வந்)

ரகுபதிகடைகள்ளு ராவெல்லாங்கொடையுது
ரவுண்டுடாணுக்கள்ளு பாடுது ஆடுது
பாழுஞ்சுடுகாட்டுகள்ளு தலைகீழாய்துள்ளுது
இதுவென்னகள்ளு பலவைதொட்டிகள்ளு
ஒழுவுதேசொள்ளு
பெண்சாதிபார்த்தாக்கால் பளிச்சென்றுமாட்டுது
பிள்ளைநயினாவென்று சொல்லையிலடிக்குது
தன்பேச்சிபோல்வந்தால் தட்டிகொடுக்குது
தடுத்துசொன்னால்பல்லை கடித்துமுடுக்குது
யெடுக்குதேகிருக்கு நாலுபேர்பிடித்தாலும்
யிழுக்குதே மொரப்பு

செஞ்சி-ஏகாம்பரமுதலியாரா லியற்றிய
குடியர் அலங்காரம்.
வெண்பா.

காலைக்குடியரெல்லாம்கவைக்குதவார் கள்குடிப்பார்
வேலைக்குப்போகார் வெரியனைப்போ—லலைவார்
வெறுமைவந்தபோது வேலைக்குப்போவார்
தருமமோகுடியர்க்குத் தான்.

புருஷன் சொல் சிந்து.

முக்கிமுக்கிகஷ்டப்பட்டுகேளடி பெண்ணே
மூணுபணம்கொண்டுவந்தேன்பாரடி கண்ணே
பக்குவமாய்செலவுபண்ணடி பெண்ணே
பாட்டாக்கள்ளுக்கொருபணந்தாக்கடி கண்ணே

பெண் சொல்லல்.

கள்ளைமறந்திடடாகுடிகார பாவி
காலையில்குடியாதடாசதிகார பாவி
பிள்ளைகுட்டிபெற்றாயோடாசண்டாள பாவி
இன்னம்புத்தியில்லையோடாகுடிகார பாவி

புரு-சேனநாள்பழக்கமடிமுட்டாளு பெண்ணே
ஜென்மத்திலேவூறிபோச்சிகெட்டண்டி கண்ணே
நானுமட்டுங்குடித்தனென்றெண்ணாதே பெண்ணே
நாலுமூணுதலம்பரையாய்நடக்குது கண்ணே

பெ-குடிக்கேனென்றுசத்தியங்கள்பண்ணையே பாவி
குடல்பழுத்துதென்றுகதைசொன்னையே பாவி
ஜாடிகள்ளுஉன்குலைக்குபோதாதே பாவி
சாப்பிட்டாலும்வீண்சண்டைகள்செய்யாதே பாவி

புரு-மனவருத்தப்படுவதாலேகேளடி பெண்ணே
மாஜினமாகிலும்தின்னுவாரண்டி கண்ணே
துணதுணென்றுபேசாதடிமுட்டாளு பெண்ணே
துட்டுகூடகுறைஞ்சிபோச்சிதூக்குது கண்ணே

பெ-பணம்போனாலும்போகுதையாஎந்தன் கணவா
பங்கியுண்டைபழக்கம்வேண்டாமெந்தன் கணவா
குணத்தின்படிநடப்பேனையாஎந்தன் கணவா
கும்மாமட்டுங்கொடுக்கவேண்டாமெந்தன் கணவா

புரு-கும்மாவுனைக்கொடுப்பதில்லைகேளடி பெண்ணே
குடிக்கமட்டும்ஒத்தைபணம்தாக்கடி கண்ணே
சும்மாசும்மாசொன்னேனென்றெண்ணாதே பெண்ணே
சோத்துபானையெகிரிபூடுந்தவறினால் கண்ணே

பெ-சோத்துப்பானை எகிரிபோனால்கேளடா பாவி
உன்கூத்துதாண்டாகாஞ்சிபோகும்குடிகார பாவி
நேத்துசொன்னசத்தியத்தைமறந்தாயோ பாவி
நெஞ்சிமட்டும்நெட்டிவிட்டுவந்தாயே பாவி

புரு-குடியருக்குசத்தியங்களேதடி பெண்ணே
கூச்சலிங்கேபோடவேண்டாம்கேளடி கண்ணே
படியடித்தும்போதைகொஞ்சங்காணண்டி பெண்ணே
பணமிருந்தால்பட்டைகுடித்துவருவண்டி கண்ணே

பெ-பட்டைமூஞ்சில்யிடிவிழுகுடிகார பாவி
பாட்டாவுடன்பட்டைசேர்ந்தால்மோசண்டா பாவி
கஷ்டப்பட்டுபணத்தைவீணாய்அழிக்காதே பாவி
காலங்கருப்பானதினால்சொன்னண்டா பாவி

புரு-பணம்போனாலும்சட்பம்போச்சிகேளடி பெண்ணே
பாட்டாயடித்தால்கையுங்காலுமுறைக்குது கண்ணே
கணக்குப்பார்த்துகுடிக்காவிட்டால்கேளடி பெண்ணே
காலணாகையில்கூடகிட்டாது கண்ணே

பெ-ஓயாகுடிகுடியாதே சண்டாளப் பாவி
உத்தியோகத்தில்மண்ணுவிழுங் குடிகாரப் ப.வி
ஏழைவயர்யெறிப்யெறிய சதிகாரப் பாவி
எப்படியும்நாசமாவாய் குடிகாரப் பாவி

(புரு)உத்தியோகம்போனாலெந்தன்சட்டம்போச் சடி
ஊரொடமையில்லாவிட்டால் வெறியும் ஏதடி
எத்தனைபேர்ஏமாளிகள் ஊரில் பாரடி
எவனாகிலும்கொடுத்துப்போறான் உனக்குயென் னடி

பெ-பஞ்சைபோலகற்றகல்விபடிக்காதே பாவி
பாரிலுள்ளோரெல்லாம்வுன்போல்குடித்தாரோ பாவி
செஞ்சிஏகாம்பரங்கவியைகேளடா பாவி
சிரிக்குதுஉலகமெல்லாம்குடிக்காதே பாவி

விருத்தம்.

பெருமானே தரிசனமே சொல்லக்கேளாய்
பேறானபச்சைமுளகா வுப்புங்கூடி
காடானநாக்கின் நுனியில்வைத்து
கள்ளதனைப் படியிலூர் நுரையைத்தள்ளி
அரகராவென்றுள்ளே செலுத்திவிட்டால்
ஆதிசிவன் ஆன்மாவும் எதிரேநிற்பார்
பிரியமாய் மதுசெய்யும் மருத்துவத்தை
பரிட்சித்துக் கொண்டவர்க்கு மோக்ஷந்தானே.

நாதநாமக்கிரியை-பல்லவி.

சாதுகளைக்கெடுக்குதையா பாழுங்கள்ளுயிது
சாப்பிட்டால்மொரைக்குதையா பாழுங்கள்ளுயிது

அநுபல்லவி.

சாதுகளைக்கெடுக்குது சாப்பிட்டால்வெறிக்குது
பாதைபடுத்துது பவுஷைக்கெடுக்குது (சாது)

சரணங்கள்.

பிரியமாயழைக்குதையா பாழுங்கள்ளுயிது
படிவாங்கிநெட்டுதையா பாழுங்கள்ளுயிது
பிரியமாயழைத்துபடிவாங்கிநெட்டுது
வெறிகொடுத்தாட்டுதுவெளியேநெட்டிதள்ளுது (சாது)

கண்டவரைகூட்டுதையா — இந்தகள்ளு
கடன்வாங்கசெய்யுதையா — இந்தகள்ளு
கண்டவரைக்கூட்டுது கடைகடைக்குஓடுது
சண்டையைவலிக்குது தெண்டங்கொடுக்குது (சாது)

காலையில்அழைக்குதையா — தலைநோவுகள்ளு
காப்புகட்டிதிரிகுதையா — தலைநோவுகள்ளு
காலையிலழைக்குது கடையில்குந்தவைக்குது
வேலையைகெடுக்குது வீண்சண்டைபோடுது (சாது)

காசியிருந்தால்அழைக்குதையா — பாழுங்கள்ளுயிது
கடன்கேட்டால்மூரைக்குதையா — பாழுங்கள்ளுயிது
காசியிருந்தாலழைக்குது கடன்கேட்டால்மொரைக்குது
மோசப்படுத்துது மூலையிலேவொரங்குது (சாது)

ஓரக்கங்கொடுக்குதையா — கள்ளுயில்லாவிட்டால்
உட்கார்ந்துறங்குதையா — அதுஊமையைப்போல
ஓரக்கங்கொடுக்குது ஒருபடியும்பறக்குது
வெறியெடுத்தால் என்னையும்படிக்குது (சாது)

வஞ்சனையாய்சொல்லவில்லை — யிந்தகள்ளைநான்
வழக்கத்தைசொன்னேனையா — யிந்தமதுவைநான்
வஞ்சனையாம்இதைவிட்டு வுட்படுவாய்புவிமீது
செஞ்சிவுகாம்பரங்கவிதை சித்தத்திலேசிதம்பாடு (சாது)

வேறுமெட்டு.

ஓகநெலகா படினபாடு ஊரந்தா அடிகிருடு ஜாடியே கள்ளு ஜாடியே, பீருபுட்டிசெய்தமோசம் பிப்பாத்தண்ணியைகேட்டுப்பாருஜாடியே கள்ளுஜாடியே, போசேடப்புடு சுறுக்குண்டாதி பொயினவதலா எமிலேது புட்டியே கள்ளு ஜாடியே, பட்டை தண்ணியை நம்பிநம்பிசொட்டுமூத்திரங் கூடகாணோம் புட்டியே கள்ளுஜாடியே கள்ளுவொச்சினமாடவினி காலிவாணுபயப்படிந்தி காவடியே கள்ளுகாவடியே, இத்தனைநாள்பட்டபாடு ஆரைக்கேட்டால்தெரிய போகுது குடுவையே, சிறுமணலூர்முனிசாமிசெப்பிசெப்பி நவ்விறுடுமொந்தையே கள்ளுமொந்தையே.

கரமாயிபோச்சி புகலையப்பியாசத்தை
கற்றவர்பேச்சி

அநுபல்லவி

வரியதிகமாச்சி வாடுங்குடிகள்பேச்சு
பிரியமாய்சுருட்டு பொடியுங்கருப்பாச்சு

சரணங்கள்

கடனென்றுபொடிகேட்டால் கதைமுடுக்குது
கட்டுப்பொடியானாலும் துட்டுக்குயர்ந்தது
பட்டணத்தில்புகலை பாழாயிபோச்சுது
பந்தர்புகலைபேச்சி அந்தரம்பாக்குது (கா)

துட்டுக்கொருகாசு சிட்டிக்கைபொடியாச்சி
தொல்லையாம்புகலைக்கு பல்லோர்பாக்கலாச்சி
மட்டிபுகலைநேயங் கற்றதேபகையாச்சி
மறந்துவிருப்போமென்றால் மனமுங்கலங்கலாச்சி (கா)

புகலையின்பேச்சு காலணா கொடுத்தாலும்
ஒருஇலையாச்சி

கள்ளுக்கடைசுருட்டு கடையாய்பறந்துபோச்சி
காம்புக்குவிலைமிஞ்சி கருப்பாய்பறக்கலாச்சி
தள்ளிவைத்தபுகலை தங்கம்குவிக்கலாச்சி
தம்படிக்குஒரு சுருட்டும்சின்னதாச்சி (கா)

ஓயாமல்சுருட்டு பிடிப்போர்உறங்கலாச்சி
உதவாததோர்வையும் பதமாய்ஒத்துப்போச்சி
வாயிலடக்குவோர்க்கு வயறும்பெரிந்துபோச்சி
வாட்டமாய்பத்தெடம் பார்த்தவர்கள்பேச்சி (கா)

கருவலாய்போச்சி கெஞ்சாயிழுப்போர்கள்
கலங்கிடலாச்சி

ஆழூர்புகலைபேச்சி அதிகாரப்பெரிதாச்சி
அதற்குமுன்கோருவை பாய்ந்துபெகரலாச்சி
ஊத்தங்கரைபுகலை கார்த்ததேவிலையாச்சி
உள்ளூர்புகலையெல்லாம் நல்லவிலையாச்சி (கா)

பந்தரின்புகலை சொன்னதுசொன்னவிலை
துள்ளுதேமேலே

அஞ்சாமல்புகலைக்கு அதிகாரம்பெரிதாச்சு
அவனியிலதுசேஷ்டை அடக்கினால்சுகமாச்சி
செஞ்சியேகாம்பரன் கவியாயெழுதலாச்சி
சீமையிலுள்ளோர்கள் பார்த்துமகிழலாச்சி (கா)

ஆனந்தக்களிப்பு.

பரிபூரணானந்தபோதம் நேற்று
பகலெல்லாமழைபெய்து சுவரெல்லாம்வோதம்

சாராயபுட்டியைநம்பு அதை
சாப்பிட்டால்கொடுக்குதே அளவற்றதெம்பு
கையிக்கிசெலவில்லைகெம்பு யாரை
கண்டேருத்தினால் சுயனுதேகெம்பு தரு

பெற்றதாயார்சொல்லைக்கேளாய்-உந்தன்
பெண்டாட்டிபிள்ளைக்கி கஞ்சிவார்க்காதே
உற்றாரைஊரிலே சேர்க்காதே-உந்தன்
ஆயுசுக்கும்ஒருகாசு தருமஞ்செய்யாதே தரு

பெற்றதாயாரைத் தடிக்கொண்டுமாட்டு
தகப்பனையும்பாட்டனையும் வீட்டைவிட்டோட்டு
உற்றாரைஉரவாரைமாட்டு இந்த
ஊரிலுள்ளோர்மேல் கச்சையுங்கட்டு தரு

தருமஞ்செய்யாதிருமனமே-நாளை
கருமத்தைசெய்தாலே கடைத்தேறலாமே தரு

கள்ளுக்கடை சிந்து

முற்றிற்று.